உ

சிவமயம்

# திருக்கோவலூர்த் தல வரலாறும் தேவாரப் பதிகங்களும்

கோவல் வீரட்டானம் ஆலய தருமபரிபாலகர்கள்

**உயர்திரு. K. M. வேலாயுதம், G. வேணுகோபாலன், R. பழநிவேல்முருகன்**

இவர்கள் விரும்பியபடி

எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு

பல அன்பர்கள் உதவியால்

எழுதப்பட்டு

ஸ்ரீ வீரட்டானத்து அம்மையப்பருக்கு

உரித்தாக்கப்பட்டது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1949
MADRAS

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை

1949

விலை அணா 8

Q23:38.2114.TK
N49

114000

உ

சிவமயம்

# முகவுரை

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த அனாதிமலமுத்த பரம பதியாகிய சிவபெருமான் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்ம கோடிகள் உய்யும் வண்ணம் இப்பரத கண்டத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய க்ஷேத்திரங்கள் பல. அவற்றுள் தேவாரம் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த சிவத்தலங்கள் 274. அவைகளில் சைவ சமயாச்சாரியார் நால்வருள் இருவராகிய "அறந்தரு நாவுக்கரசர், ஆலால சுந்தரர்" ஆகிய இருவரும், சந்தானச்சாரியார் நால்வருள் "மெய்கண்ட சிவம், அருணந்தி சிவம்" ஆகிய இருவரும் திரு அவதாரம் செய்யப்பெற்றதும், பொன்னாட்டினும் சிறந்த தொண்டைநாடு, சோழநாடு இவ்விரண்டுக்கும் மத்தியில் நடுநாயகமென விளங்குதலால் "நடுநாடு" என்று வழங்கப்படுவதுமாகிய திருமுனைப்பாடி நாட்டிலே "திருக்கோவலூர் வீரட்டம்" என்னும் புண்ணிய சிவத்தலம் மிகச் சிறந்து விளங்குகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களையும் ஒருங்கே அமையப்பெற்ற இத்தலத்தில் அருட்குறியாக விளங்கும் இறைவனை வழிபடுதல் இன்பம் பயப்பதாகும். இவ்வின்பத்தை முற்றிலும் அடைவதற்கு மிகவும் இன்றியமையாதது மூர்த்தி மகிமை, தீர்த்த விசேடம், தலச் சிறப்பு, கல்வெட்டு, தேவாரம், திருப்புகழ், சிற்பம் முதலிய விஷயங்களைத் தெரிந்து கொண்டு வழிபடுதலாம். அதற்கு உதவியாய் நிற்பது இச்சிறு நூல். இத்தலம் ஊனடைந்த உடம்பின் பிறவியை நீக்கி வீடளிக்கும் தன்மையுடைய தென்பது இதற்குள்ள இரண்டு தேவாரத் திருப்பதிகங்களின் உட்குறிப்பாகும். இங்குப் பெண்ணையாறு உடல் நோயும், உயிர் நோயும், தீர்க்கும் புனித தீர்த்தமாகும். ஆறு, மலை, குன்றுகள், கோவில்கள், வயல்கள் முதலிய சூழ்ந்த இயற்கையழகு மிக்க இத்தலம் வினை தீர்க்கும் தலமாதலின் ஆஸ்திகர்கள் அனைவரும் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுவார்கள் என்னும் நோக்கத்துடன் இந்நூல் வெளியிடப்பட்டது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்கள் துணைகொண்டு தேவிகோட்டை சிவநேயச் செல்வர் ஸ்ரீமான் ராம. மெ. சி. த. வைரவஞ் செட்டியார் அவர்கள் குடும்பத்தாரால் இவ்வாலயத்திற்கு மிகச் சிறந்த திருப்பணி செய்யப் பட்டுக் கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடத்தப்பட்டது. அப் போது திருக்கோவலூர் மான்மியம் என்று ஒரு சிறு நூல் ஷை சுவாமிகளால் எழுதிப் பிரசுரிக்கப்பட்டது. அந்நூல் இப்பொழுது கிடைப்பது அருமையாக இருப்பதால் இந்நூல் அச்சிட்டு வழங்கப் பெறுகிறது.

திருக்கோவலூர் வீரட்டானம்
1 - 5 - 1949

K. M. வேலாயுதம் பிள்ளை
ரா. பழநிவேல்முருகன்
G. வேணுகோபாலன்
ஆலய தரும பரிபாலகர்கள்

உ

சிவமயம்

# திருக்கோவலூர் மான்மியம்

## காப்பு

## முத்தி விநாயகர்

### கலி விருத்தம்

* சுத்தப் பிரணவ சொரூபம தாய்நின்று
பத்தர் வேண்டுவ யாவையும் பாலிக்கும்
வித்தக் கோவலில் வீரட்ட மேவிய
முத்தி வேழத்தின் மொய்கழல் காப்பதே. 1

### வீரட்ட ஹாஸப் பெருமான்

பாரெட்டுக் கோணத்தும் பரவியுள வுயிர்த்தொகைகள் பதறி யோடப்
போரிட்டுத் துயர்விளைத்த அந்தகனை மூவிலையாற் போழ்ந்து சூலக்
கூரிட்டுக் கூத்தாடி யடியவர்கட் கின்பருளக் கோவல் வைகும்
வீரட்ட நாதன்றன் விரைகழலைப் பணிந்தேநம் வினையை வெல்வாம். 2

### பெரிய நாயகி யம்மை

ஆவலுடன் சிவபெருமான் திருக்கண்கள் தனைமூடி யண்ட மெல்லாம்
பாவியபே ரிருளேயோர் வடிவான அந்தகனைப் படுத்தே இன்பம்
மேவிடவே அப்பெருமான் மேனியைவிட் டகலாத மெல்லி யாகுங்
கோவலில்வாழ் பெரியநா யகியம்மை யடிபணிந்தே குறையைத் தீர்ப்பாம்.

---

* இவை திருக்கோவலூர் தமிழ் வித்துவான் உயர்திரு T. வடிவேல் முதலியார் அவர்கள் இயற்றியன.

## பெரியானைக் கணபதி

கரிமீதும் பரிமீதும் சுந்தரருஞ் சேரருமே கைலை செல்லத்
தரியாது உடன்செல்ல ஔவையுமே பூசைபுரி தரத்தை நோக்கிக்
கரவாது துதிக்கையால் எடுத்தவர்கள் செலுமுன்னம் கைலை விட்ட
பெரியானைக் கணபதிதன் கழல்வணங்கி விருப்பமெலாம்பெற்றுவாழ்வாம்.

## சண்முகப் பெருமான்

குகமுனிவன் வேள்விசெயற் கேற்றவிடம் வேண்டுமெனக் குறையிரப்ப
அகமகிழ்வாய்த் திருக்கைவேல் தனையனுப்பி யவ்விடத்தை யறியக்காட்டி
மகவொன்றும் அதிற்றோன்ற செய்திட்டு வீரட்ட மயின்மேல் வைகி
இகபரவாழ் வருளுகின்ற குமரவே ளிணையடியை இறைஞ்சி வாழ்வாம். 5

## திருஞானசம்பந்தர்

கருணையுரு வாகியவெம் பிராட்டிமுலைப் பாலருந்திக் கடவுள்பக்தி
மருவிடவே தமிழ்ப்பாடி அறையணிநல் லூரிலுள மலைமீதேறி
அருணையைக்கண் டிசைபாடி அன்பருள முருகச்செய் யடிக ளாகும்
தெருணிறைந்த திருஞான சம்பந்தர் திருவடியைத் தினந்து திப்பாம். 7

## திருநாவுக்கரசர்

பரிபவஞ்செய் பல்லவனைப் பதம்பணியச் செய்திட்ட பனுவ லாளன்
தெரிவையராங் தமக்கைசொல் தெய்வமொழி யாக்கொண்டு திடம்பெற்
[றுய்ந்தோன்
பிரியமுடன் கைத்தொண்டும் வாய்த்தொண்டும் புரிந்திட்ட பெரியரான
அரியபுகழ் திருநாவுக் கரசரிரு தாள்வணங்கி யருள்பெற் றுய்வாம். 8

## திருநாவலூரர்

இருமகளிர் தமைமணந்தும்இறையோன் றன்பத்திதனில்இறையுங்குன்று
தொருமையுடன் உமாபதிவா ழாலயங்கள் பலபாடி யுய்ந்த மேலோன்
பெருமையுள தமிழ்க்கவிதை கைலைசென்று உரைத்திட்ட பேறுபெற்ற
திருநாவ லூரடிகள் திருவடியை யருள்பெறவே தினந்து திப்பாம். 9

### திருவாதவூரர்

பாண்டியன்றன் பொருளெல்லாம் பரன்பணிக்கே யாமெனச்செய் பரிவு
[நோக்கி
ஆண்டகையே யாளாய்வந் தாறடைத்தா ரெனிலவர்தன் அன்பின்மேன்மை
ஈண்டெவர்தாம் உரைக்கிற்பார் ஈசனருள் தனைப்பெற்றே யிலங்குகின்ற
காண்டகுசீர் திருவாத வூரரிரு கழல் வணங்கிக் கலியை வெல்வாம். 10

### சண்டேசுர நாயனர்

அரன் பூசைக் கிடையூறு புரிபவரை யழிப்பதுவே அறமாக் கொண்ட
தாமறியா திடையூறு செய்தந்தை தாள்தடிந்து தவமேற் கொண்டு
பரன்பக்தி பூண்டுள்ள திருத்தண்டி யடிகளிரு பதம்வ ணங்கி
நிரந்தரமாய் சிவானந்த வாரிதியில் என்றென்றும் நிலைத்து வாழ்வாம். 11

### மெய்ப்பொருள் நாயனர்

கல்லுடையும் வெண்ணீறுங் கண்டிகையும் மெய்ப்பொரு ளாய்க்கருதி
[நின்ற
வல்லவர்மேற் பகைகொண்டு முத்திநா தன்புரிந்த வஞ்சங் கண்டும்
நல்லதத்தன் றனையனுப்பி நலம்புரிந்த மெய்ப்பொருளார் நளின பாதம்
அல்லலற வேபணிந்து பிறவியெனும் நெடுந்தளையை அறுத்துய்வோமால்.

### மற்றைய அடியார்கள்

எவ்வகைய செயல் செயினும் அவையெல்லாம் ஈசனது செயலா வெண்ணி
செவ்வியபல் வகையானுஞ் செயல்புரிந் தேசிவன்கழலைச் சேரப்பெற்ற
திவ்வியநல் லடியவர்கள் பலரடியும் மனத்தெண்ணி சேவை செய்து
கவ்வியநம் பிறவி வினைக் கட்டறுத்துச் சிவன்கழலே கருதி வாழ்வாம். 13

### கலைமகள்

கம்பன்றன் மொழிக்கிரங்கிக் காற்சிலம்பை யருளியவள் கல்வி யோங்க
நம்பிநின்ற கூத்தற்காய்ச் செங்குந்தர் உயிரீந்த நாவின் மேலாள்
இம்பரில்யான் இயற்றுகின்ற இந்நூற்கும் அருள்செய்யும் இசைம டந்தை
செம்பதுமத்தாள்வணங்கிச் செந்தமிழை நனிவளர்த்தே செழித்துவாழ்வாம்.

## நரசிங்க முனையரைய நாயனார்

ஆதிரைநாள் தொறுமடியர்க் கமுதளித்தே
நூறுசெம்பொன் னளித்து வந்தோர்
பாதகனுந் திருநீறு தரித்துவர
விரட்டிப்பொன் பணிந்தே யீந்தோர்
காதலுடன் சுந்தரரை மகவெனவே
வளர்த்திட்ட கருணை யாளர்
நீதியுள நரசிங்க முனையரையர்
திருவடியை நினைந்தே வாழ்வாம்.

## வாழி

திருவளர் கோவல் வீரட்ட நாதர்
திருவடிக் கமலங்கள் வாழி
பெரியநா யகிபொற் கழலிணைவாழி
பெரியமா கணபதி வாழி
முருகனற் பதங்கள் வாழிநந் தீசர்
முளரிநற் பதங்களும் வாழி
பெரியசம் பந்த ராதியா நான்கு
பெரியர்த மடிகளும் வாழி.

(சிட்டானுபூதி சாரம்)

—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வீரட்டேச்சுவரர் துணை

# திருக்கோவலூர்த் தல விளக்கம்

## 1. இருப்பிடம்

திருக்கோவலூர் வீரட்டானம் என்னும் சிறப்புற்ற சிவத் தலம் தென்னாற்காடு ஜில்லாவில் தென்பெண்ணை யாற்றங்கரையின் தென்பால் திருக்கோவலூர் என்னும் தாலுக்காவின் தலை நகராய் விளங்குகிறது. விழுப்புரத்திலிருந்து காட்பாடி செல்லும் தென்னிந்திய இரயில்பாதை கிளை வழியிலுள்ளது. ஸ்டேஷனிலிருந்து இத்தலம் தென்மேற்குத் திசையில் ஒரு மைல் தூரத்திலுள்ளது. குதிரை, மாட்டு வண்டி வசதிகள் உண்டு. புகை வண்டி நிலையத்திற்கு அண்மையில் அறையணிநல்லூர் (அறகண்ட நல்லூர்) என்னும் சிவத்தலம் உள்ளது. அறையணிநல்லூருக்கும் திருக்கோவலூருக்கும் இடையில் தென்பெண்ணை நதி ஓடுகிறது. இவ்வாற்றினை எளிதில் கடக்க ஒரு கற்பாதை உளது. ஆற்றினது தென் கரையில் கோவல் வீரட்டானம் அமைந்துள்ளது. திருவதிகை, திருவாமாத்தூர், திருவெண்ணெய்நல்லூர், திருவிடையாறு, திருவண்ணாமலை, விருத்தாசலம்.

(திருமுது குன்றம்) இவைகளுக்கு மத்தியில் நடுநாயக மாக விளங்குகின்றது. முன்னாளில் இந் நகர் மலாடு என்னும் மலையமாநாட்டில் குறுக்கைக் கூற்றத்தைச் சார்ந்தது. இடைக் காலத்தில் இதனைச் சூழ்ந்த நாட்டை 'திருமுனைப்பாடி நாடு' என்றும் 'சேதி நாடு' என்றும் 'நடு நாடு' என்றும் வழங்கி வந்தனர். ஊரின் கீழ்ப்பாகத்திற்கு 'கீழையூர்' என்று பெயர். இங்குத்தான் 'வீரட்டானம்' இருக்கிறது. ஊருக்கு மேற்பாகம் கடைத்தெரு, யூனியன் ஆபீஸ், போலீஸ் டேஷன், தபாலாபீசு, உயர்தரக் கலாசாலை, கவர்ன் மெண்டு கச்சேரிகள் முதலியவை இருக்கின்றன. இங்கு ஒரு சிறப்புற்ற விஷ்ணு ஆலயம் உண்டு. ஊர் - ஆறு, மலை, குன்றுகள், ஏரி, சோலைகள், வயல்கள் முதலியன சூழ்ந்த இயற்கை அழகுடையது. இங் கிருந்து கூடலூர், புதுச்சேரி, விருத்தாசலம், கள்ளக் குறிச்சி, தியாகதுர்க்கம், திருவண்ணாமலை முதலிய விடங்களுக்கும் போகவர பஸ் வசதி உண்டு. இது ஒரு பஞ்சாயத்து போர்டு-யூனியன். மின்சார விளக்கு வசதியுடையது. ஜில்லா போர்டு ஆஸ்பத்திரியும், ஒரு டேனிஷ்மிஷின் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. யாத்திரீகர்கள் தங்க சத்திரங்களும், மடங்களும் உண்டு. போஜன சாலைகளும், சிற்றுண்டி சாலை களும், நாடக சாலைகளும், நூல் நிலையங்களும் இருக் கின்றன.

## 2. பெயர் - வகை

எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமான் ஆன்ம கோடிகள் தம்மை எளிதிற் கண்டு வழிபட்டுய்யும் பொருட்டு எண்ணிறந்த திருக்கோவில்களில் வீற்

திருந்து, அன்பு செய்யும் அடியார்களுக்குச் சாந்த மூர்த்தியாய் எழுந்தருளி அறக்கருணை புரிகின்றார். தீநெறி மாக்களுக்கு உக்கிர மூர்த்தியாய் எழுந்தருளி மறக்கருணை புரிந்தருளுகின்றார். மறக்கருணை புரிந்த இடங்கள் எட்டாகும். அவையாவன :

1. திருக்கண்டியூர் - பிரமன் தலைகளில் ஒன்றைக் கொய்த இடம்.
2. திருக்கோவலூர் - அந்தகா சூரனைக் கொன்ற விடம்
3. திருவதிகை - திரிபுரதகனம் செய்த விடம்.
4. திருப்பறியலூர்-தக்கன் சிரத்தைத் தடிந்த விடம்.
5. திருவிற்குடி - சலந்தரனைக் கொன்ற விடம்.
6. திருவழுவூர் - யானையை உரித்தணிந்த விடம்.
7. திருக்குறுக்கை - மன்மதனை எரித்த விடம்.
8. திருக்கடவூர் - இயமனை உதைத்த விடம்.

இவைகள் ஒவ்வொன்றும் வீரஸ்தானம் அல்லது வீரட்டானம் எனப் பெயர் பெறும். அவற்றுள் இரண்டாவது கோவல் வீரட்டானம். இதனைத் திருக்கோவலூர் என்றும் கூறுவர். கோ+அல்+ஊர்= கோவலூர். அல்+கோ+ஊர் எனற்பாலது சொல்நிலை மாறுதல் என்னும் இலக்கணப் போலிப்படி கோவலூர் என்றாயிற்று. அல்=இருள் வடிவமான அந்தகாசூரனை அடக்கி ஆண்ட, கோ=தலைவராகிய இறைவன் எழுந்தருளியிருக்கும், ஊர்=ஊராகும். கோ+வலம்+ஊர் எனப் பிரித்து கோ=பசுவாகிய காமதேனு பூசித்து, வலம்=வலம் வந்த, ஊர்=ஊராகும் என்றும், கோ=அரசன் (அரசனாகிய) பலன்= மகாபலி சக்கரவர்த்தி பூசித்துப் பேறு பெற்ற ஊர் என்றும், கோ=பசுக்களை, வலன்=புரப்பதில் வல்லவ

ளுகிய கிருஷ்ணன், ஊர்=பூசித்துப் பேறு பெற்ற ஊராகும் என்றும், பலவிதமான பொருள் கொள்ளலாம். திருக்கு+ஓவல்+ஊர் எனப் பிரித்துத் திருக்கு=அறியாமையை, ஓவல்=ஒழித்து உயிர்களுக்கு அருள் புரியும், ஊர்=ஊராகும் என்றும் கூறுவர். இத்தலம் ஊனடைந்த உடம்பின் பிறவியை நீக்கி, வீடளிக்கும் தன்மை நீடிய ஊர் என்பது இதற்குள்ள இரண்டு தேவாரப் பதிகங்களின் உட்குறிப்பாகும்.

**திருக்கோவலூரின் வேறு பெயர்கள்**

(1) சிவபுரம் (2) சைவபுரம் (3) வீரட்டபுரம் (4) திருக்கைவேலூர் 5) கண்ணுவபுரம் (6) கபிலமாபதி (7) காமபுரம் (8) கணேசபுரம் (9) கிருட்டிணாரணியம் (10) உருத்திரபுரம் (11) வேள்விபுரி (12) குகேச்சுரம் (13) வினைவெல்புரி (14) தெய்வீகபுரி (15) திருவிக்கிரமம் (16) கோவலம் (17) கோவல் (18) கைவலகேத்திரம் (19) காளிபுரம் (20) சூரியபுரம் (21) குருபுரம் (22) குபேரபுரம் (23) மிருகண்டுபுரம் (24) பதஞ்சலி வியாக்ரபாதபுரம் (25) இந்திரபுரம் (26) உரோமசபுரம் (27) இராகவபுரம் (28) பரசுராமபுரம் (29) ஆதிசேஷபுரம் (30) கற்பகபுரம் முதலியன.

## 3. பெருமைக்கு ஏதுவாவன

புராணம் பாடப் பெற்றிருத்தல், மூர்த்தி, தலம், தீர்த்தம், சரித்திரத் தொடர்பு, கல்வெட்டுடைமை, சான்றோரிருக்கை, தேவாரம் திருப்புகழ் பாடப்பெற்றமை முதலியவற்றால் சிறப்புடையது.

இத்தலத்திற்கு வடமொழியிலும் தென்மொழியிலும் புராணங்கள் இருக்கின்றன. இத்தல மான்மியம் கந்தபுராணத்தில் தேவகாண்டத்திலுள்ளது.

திருநீறும், கண்டிகையும், அஞ்செழுத்துமாகிய முப்பொருள்களையே சாதனமாகக் கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்து மெய்ச் சமயமாகிய சைவ சமயத்தை நிலைநாட்டிய பரமாச்சாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள் என்ற இரு பெருந்தகையாரும் திருவாய் மலர்ந்தருளப்பட்ட தேவாரத் திருப்பதிகங்களை யுடையது. மூவர் அருளிய க்ஷேத்திரக் கோவையிலும் வைத்துப் பாடப்பட்டிருக்கிறது. முருகனருள் பெற்ற அருணகிரிநாதரால் துதிக்கப் பெற்ற திருப்புகழ் பாடல் ஒன்றும் உண்டு.

## 4. ஆலயம்

ஸ்ரீ வீரட்டேச்சுரர், ஸ்ரீ பெரிய நாயகியம்மை ஆலயங்கள் இரண்டும் தனித்தனியாக இருக்கின்றன. இவ்விரண்டும் முற்காலத்தில் ஒரே சுற்று மதிற்குள் இருந்தன எனத் தெரிகிறது. அம்மதில் தற்போது இல்லை. சுவாமி ஆலயத்து முகப்பில் ஆஸ்தான மண்டபம் இருக்கின்றது. இங்கேதான் சமயப் பிரசங்கங்கள் நடைபெறும். சுவாமி ஆலயத்திற்கு இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. சுவாமி சந்நிதானம் சத்தியோ ஜாதமுகம் பூஜைக்கு உரியதாக மேற்கு நோக்கி இருக்கிறது. இறைவன் விளங்கும் லிங்கம் சுயம்புலிங்கம். அம்மை ஆலயமும் மேற்கு நோக்கியே இருக்கின்றது.

இங்குள்ள இறைவன் பெயர் வீரட்டேச்சுரர். அம்மை - பெரிய நாயகியம்மை (சிவானந்த வல்லி). கணபதி - பெரியானைக் கணபதி. முருகன் - திருக்கை வேலன். கோயில் - வீரட்டம் அல்லது வீரட்டானம் எனப் பெயர் பெறும். தல விருக்ஷம் - கொன்றை.

தீர்த்தம்-பெண்ணை நதி. வீரட்டேஸ்வரர் திருநாமங்கள் வருமாறு : (1) வினைவென்றான் (2) அந்தகாந்தகன் (3) இருட்கூடறுத்தான் (4) திரிசூலன் (5) பச்சிமாபி முகத்தன் (6) திருக்கோவலத்தன் (7) பெண்ணை வலத்தன் (8) வீரட்டகாயன்.

திருக்கோயிலில் வீரட்ட லிங்கம் அன்றி ஏனையோர் பூசித்த லிங்கங்களும் மற்றைய பரிவாரமூர்த்திகளும் இருக்கின்றன. அந்தகாசுர சம்மார மூர்த்தி என்ற ஓர் உற்சவ மூர்த்தியை ஆலயத்தில் வடக்குப் பிரகாரத்தில் நடராஜருக்குப் பக்கத்திலுள்ள அழகிய சபையில் அந்தகனை நிக்ரானுக்கிரகம் செய்யும் தோற்றத்தில் காண்கிறோம்.

## 5. தல விநாயகர் மகிமை

தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் இத்தலத்திலுள்ள விநாயகரைத் தினந்தோறும் பக்தி சிரத்தையோடு பூசனை செய்து வந்தார். நறுமணமுள்ள பூமாலைகள் பல சாற்றுவார்; தெய்வ மணங்கமழும் தமிழ் மொழியால் பாமாலைகளும் அணிவிப்பார். இப்படிச் செய்து வரும் நாளில் ஒரு நாள் தன் நண்பர்களாகிய சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாணயனாரும் திருக்கைலாயம் செல்வதை யறிந்து தாமும் அவர்களுடன் அங்குச் செல்ல விரும்பி, அம்மையார் விநாயகர் பூசையை அவசரமாகச் செய்தார். அதை யறிந்த கணேசப் பெருமான் அம்மையாரை நிதானமாகப் பூசை புரியும்படி ஆக்ஞாபிக்க அவரும் பயபக்தியுடன் சாவதானமாக யானைமுக அண்ணலைப் பூசித்து "சீதக்களபச் செந்தாமரை" என்பதை முதலாகப் பெற்ற அகவலைப் பாடி முடித்து அருளைவேண்டி

நின்றார். விநாயகப் பெருமான் ஔவையாருக்குக் காட்சி தந்து விஸ்வ ரூபம் எடுத்து அம்மையாரைத் தன் துதிக்கையால் தூக்கி வெள்ளையானையின் மீதும், குதிரையின் மீதும் சென்று கொண்டிருந்த அம்மையாரின் நண்பர்கள் கைலாசம் சேருமுன், அவ்விடம் கொண்டு போய்ச் சேர்த்தார். இதனால் இத்தல விநாயகருக்குப் "பெரியானைக் கணபதி" என்று பெயர்.

## 6. மூர்த்தி மகிமை

திருக்கைலாயத்தில் சிவபெருமான் பார்வதியம்மையாரோடு அந்தப்புரத்தில் உல்லாசமாக வீற்றிருக்கையில், பெருமானது திருக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி என்று விளக்குவான் வேண்டி அம்மையார் விளையாட்டாகப் பெருமான் கண்களைத் தன் கைகளால் பொத்தினர். அக்கணமே உலகெங்கும் பரவி யிருந்த ஒளி மறைந்து எங்கும் இருள் கவிந்தது. இரவு பகலின்றி உயிர்கள் தொழிலின்றி தேவர் முதல் யாவரும் வருந்தினர். அம்மையாருக்கு ஒரு கணப்பொழுதாயினும் தேவர்களுக்கு ஆயிரம் ஆண்டுகள் சென்றன. "உனக்குத் திருவிளையாட்டு உலகத்திற்குத் துன்பம்" என்றனர் சிவபெருமான். இறைவி பயந்து கண்களை விடுத்துப் பக்கத்தில் நின்றனர். விழிகள் விளங்கின. ஒளி திகழ்ந்தது. ஆண்டவனது அருளிலார் நெஞ்சம் போல் இருளானது ஒருபால் ஒதுங்கி இருந்தது. காளகண்டன் அருளால் அவ்விருட் செறிவினின்றும் ஓர் அசுரன் தோன்றினன். அவன் பிறந்த இடத்தாலும், பெற்றிருந்த கருமை நிறத்தாலும் அந்தகன் எனப்பட்டான். அவன் பரமசிவனை நோக்கி

கொடிய தவம் புரிந்தான். சிவபெருமானும் தரிசனம் தந்து அருள் பாலித்தார். "வேண்டுவார் வேண்டுவதே ஈயும்" வள்ளலிடமிருந்து இருதிணை உயிர்களாலும், எவ்வாயுதத்தாலும் அழியா வரம் பெற்று அதனால் அகங்காரம் அடைந்து, அசுரகணங்களோடு அமர லோகம் சென்று சூறையாடினன். இந்திரன் முதலிய தேவர்கள் பலகாலம் துன்பமுற்றனர். அதனால் அமரர்கள் பிரமன், மால் இவர்களிடம் சென்று தம் குறைகளைச் சொல்லி அவர்களுடன் திருக்கோவலூரை அடைந்து சிவபெருமானிடம் தம் குறைகளைச் சொல்லித் துதித்தனர். அவர்களது வேண்டுகோட்கிணங்கிய கைலைநாதன் தம் பூதகணங்களுடன் அவர்களை அந்தகனுடன் அமர் செய்ய அனுப்பினர். அவர்கள் சமரில் தோற்றுப் பின்னிட்டதை யறிந்த இறைவன் தானே நேரில் சென்று வீர நகை செய்து தன் திரிசூலத்தால் அவனைக் குத்தி எடுத்து உயர்த்திப் பிடித்துத் திருநடனம் புரிந்தனர். அத்துன்பத்திற்கு ஆற்ருத அவ்வசுரன் அச்சூல நுனியில் இருந்தபடியே பெருமானைப் பலவாறு தோத்திரம் செய்தனன். "வெறுப்பனவே செய்யும் சிறுமையினையும் தம் பெருமையினல் பொறுக்கும் பெம்மான்" அவனை விடுவித்து அருள் நோக்கஞ் செய்து அவன் வேண்டிய சிவ ஞானத்தையும் தந்து சிவகணத் தலைவனும் பேறும் கொடுத்தருளினர். பின்னர்த் திருமால் முதலிய அமரர்கள் வீரட்டநாதனைப் பன்மலர் கொண்டு பூசித்துத் தோத்திரம் செய்து துன்பமகன்று இன்புற்றனர். வீரட்டகாச மென்னும் வீரநகையால் அந்தகாசூரனை வென்றதால் இத்தலத்திற்கு வீரட்டம் எனவும், பெருமானுக்கு வீரட்ட நாதர் எனவும், அந்தக

னுக்கு முடிவை உண்டு பண்ணியதால் அந்தகாந்தகன் எனவும் பெயர்கள் உண்டாயின. தேவர்கள் வினையும், அந்தகன் வினையும் தீர்த்தருளிய காரணத்தால் வீரட்டேச்சுரருக்கு "வினையை வென்றான்" எனத் திருநாமம் உண்டாயிற்று.

இந்தச் சரித்திரத்தை லக்ஷியமாக வைத்துக் கொண்டு அன்பர்கள் தங்கள் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானம் அடைய இத்தலத்தில் வாசஞ் செய்து பிநாகினியில் தீர்த்தமாடி அம்மையப்பனுகும் இறைவனை மெய்யன்புடன் பூசித்தால் அந்தகன் பெற்ற சிறந்த பேற்றை நிச்சயமாக அவர்களும் அடையலாம் என்பதே இத்தலத்தின் சிறப்பாம்.

இத்தலத்தை உள்ளன்புடன் தரிசனம் செய்தவர்களுக்கு வேறொரு தலத்தில் ஆசையும், பாவங்களும், கொடிய உலகங்களும் இல்லை என்று தலபுராணம் கூறும்.

## 7. தீர்த்த விசேடம்

இவ்வாலயத்திற்குரிய தீர்த்தம் தக்ஷிணகங்கை என்று புகழப்படும் தென் பெண்ணை நதியாகும். அது ஆலயத்தின் வடக்கு, கிழக்கு என்ற இருபுறங்களிலும் சூழ்ந்து, தவழ்ந்து, வலமாகச் செல்கின்றது. தமிழறிவிற் சிறந்ததென்று புலவரால் துதிக்கப் பெற்றது. ஒளவையார் பாடலுக்கு மகிழ்ந்து நெய் பால் தலைப் பெய்து வந்த பெருமையது. பெண்ணைநதி - பனங் காட்டு வழியேவரும் ஆறு. பெண்ணை - பனை. இதனைப் 'பிநாகினி' என்றும் அழைப்பர். இத்தலத்தில் இந்நதி சிவபெருமான், விஷ்ணு, பிரமதேவன், உமாதேவியார், குமாரக்கடவுள், தெய்வீக ராஜன்

இவர்களாகவும் அமுதமாகவும் விளங்குகின்றது. இந்நதியே திருவண்ணுமலை என்னும் திவ்விய தலத்திற்கும் க்ஷேத்திர நதிகளில் ஒன்று என்று அருணுசல புராணம் கூறுகின்றது. கொலைப்பாதகம், மகோதரம், குஷ்டம், வாதநோய் முதலியவற்றை நீக்கவல்லது. ஒவ்வொரு ஆண்டின் தைத்திங்கள் முதல் ஐந்து நாட்களிலும் கங்கை பெருகுவதால் அவ்வைந்து நாட்களிலும் இந்நதியில் நீராடினுல் கங்கையில் நீராடின பலன் உண்டு என்று புராணம் கூறும். இதனுள் நீராடுவோர் புத்திரர், செல்வம், முதலியன பெற்று, இவ்வுலகில் சுகமாயிருந்து பின்னர்ச் சிவன் கழலே புகுவார்.

## 8. தீர்த்த வரலாறு

திருக்கைலாயத்தில் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்ற சனகாதி இருடிகள் நால்வரையும் நந்திதேவர் தடுத்தனர். அவர்களிட்ட சாபத்தால் மனித உருவடைந்த நந்தி கௌரி தவஞ்செய்த குடகு மலையைச் சார்ந்து சிவபெருமானைக் குறித்துப் பஞ்சாக்கினி மத்தியில் தவம் செய்தனர். அதற்கு உவந்த பெருமான் பார்வதி சமேதராய்க் காட்சியளித்து அவர் தவத் தீயினையடக்கத் தம் சடையிலுள்ள கங்கையின் நீரைப் பிநாகம் என்னும் தம் வில்லின் மூலமாக நந்தியின் சிரசில் சொரிந்தனர். அஃது ஓர் அருகப் பெருகியது. அதுவே பெண்ணைநதி. பிநாகினி என்றும், தக்ஷிண கங்கை என்றும் உலகர் புகழ்கின்றனர். அதில் மூழ்கிப் பாபம் நீங்கித் தூய்மையடைந்தவர் பலர். அவர்கள் தர்மப்பிரகலாதன், பதுமயோனி, சுதவன்மன், குச்சகௌசிகன், மண்டுகன், நின்மலன், அனகன் முதலாயினேர் ஆவர். இதன் பெருமை பிரமாண்ட புராணத்திலுள்ளது.

இந்நதியிலேயே உருத்திர தீர்த்தம், கபிலர் தீர்த்தம், கண்ணுவ தீர்த்தம், இராமலக்குமண சீதாதீர்த்தம், பரசுராம தீர்த்தம், யம தீர்த்தம், பிதிர் தீர்த்தம், சப்த விருடியர் தீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம், பத்ர சங்கமம் முதலிய அனேக தீர்த்தக் கட்டங்கள் இருக்கின்றன. திருக்கோயிலுக்கருகில் ஆற்றில்இறங்கி நீராடப் படித்துறையும் உண்டு. பிரம்மோற்சவத்தின் முடிவில் இந்நதியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். தைத்திங்கள் 5ம் நாள், மாசி மகம், மற்ற புண்ணிய காலங்களிலும் தீர்த்தவாரி உண்டு.

## 9. பூசித்துப் பேறு பெற்றவர்கள்

விநாயகர், முருகன், காளி, ஏகாதச உருத்திரர், இராமர், பரசுராமர், கிருஷ்ணன், இந்திரன், எமதர்மராஜன், கற்பகத்தரு, காமதேனு, சூரியன், குரு, உரோமச முனிவர், கண்ணுவர், கபிலர், மிருகண்டு, பதஞ்சலி, வியாக்ரபாதர், காமன், குபேரன், வாணாசுரன், சப்தரிஷிகள், ஆதிசேஷன் முதலியோர். இவர்களில் சிலர் ஸ்தாபித்துப் பூசித்து வந்த சிவலிங்கங்களும் ஆலயத்துப் பிரகாரத்தில் உள்ளன.

## 10. சரித்திர நிகழ்ச்சிகள் (தெய்விகன் வரலாறு)

ஒருகால் காரண்டன், வல்லூரன் என்ற இரண்டு அசுரர்கள் பிரமதேவர்பால் வரம்பெற்று அகங்காரங் கொண்டு மூவுலகங்களையும் வருத்தியபொழுது குக முனிவர் என்பவர் முருகப்பெருமான் கட்டளைப்படி அவர் கைவேல் குறிப்பிட்ட விடத்தில் (திருக்கை வேலூர்) ஓர் யாகம் செய்தனர். அந்த வேள்வியில் இமவான் அம்சமாக 16 வயதுள்ள ஒரு வீரன் பச்சைக்

குதிரையோடு தோன்றினன். அவனே தெய்வீகன் எனப்பட்டான். அவன் தேவர்கள் வேண்டியபடி காரண்ட வல்லூரரைக் கடும்போர் செய்து கொன்றான். அவன் சிவபுரமாகக்கண்ட 'இறையா புரி' என்னுமூர் இப்பொழுது எலவானுசூராக வழங்கு கிறது. அவன் தன் குதிரையின் உதவியால் கங்கையில் நீராடி, இராமேச்சுரம் சென்று சிதம்பரம் முதலிய தலங்களையும் வணங்கிக்கொண்டு ஒரே தினத்தில் தன் நகருக்குத் திரும்புவான். அவன் ஒரு கணத்தில் சுற்றி வந்த நாடே இவன் அரசாட்சிக்குட்பட்ட நாடாக ஆயிற்று. அவன் சிவ பூஜையுடையவன். வீரட்ட நாதன் அருளை நிரம்பப் பெற்றவன். அடியார் பக்தி குரு பக்தியுடையவன். இவனது வீறினைக் கண்டதமிழ் வேந்தர் மூவரும் அழுக்காறடைந்து இவனையடக்கி இவனது குதிரையையும் பறிக்க எண்ணிப் பலதரம் சண்டை செய்து தோல்வியுற்றனர். சேர, பாண்டிய, சோழராம் மூவரும் அவன் வீரத்தினை மெச்சித் தம் அரும்புதல்வியராகிய பத்மாவதி, காஞ்சனமாலை, சண்பகமாலை என்னும் முக்கன்னியர்களையும் தெய்வீக னுக்கு மணம் செய்து கொடுத்தனர். முத்தி நகரங் களாகிய காசி, மாயா, மதுரா, அயோத்தி, அவந்தி துவாரகா, காஞ்சி என்றவைகளை ஆண்ட வேந்தர்கள் எழுவரையும் வெற்றி கொண்டு, அவர்கள் புதல்வியா ரையும் மணந்து காணிக்கைப் பொருள்களோடு தன் நகரம் வந்து சேர்ந்தான். ஔவையார் கோரிக்கை யின்படி அங்கவை, சங்கவை என்னும் பாரிமகளிரைத் தமிழ் மூவேந்தர் முன்னிலையில் மணந்தான். அம் மணத்தில் மூதாட்டியார் அருட் பாடல்களின்படி பொன்மாரி பெய்தது; வயல்களில் அரிசி விளைந்தது;

பருத்திச் செடிகள் ஆடைகளைக் காய்த்தன; பெண்ணை யாற்றில் பால், தயிர், நெய் வெள்ளமாகப் பெருகி வந்தன; பட்டுக் கிடந்த பனைமரத் துண்டு மரமாகிப் பூத்துக் காய்த்துத் தமிழ் மூவேந்தருக்கும் பங்குக்கு மூன்று பழம் வீதம் கொடுத்தது. 18 தேச மன்னர்களை வெற்றி கொண்டு "தெய்வீக நரசிங்க ராஜ உடையார்" எனப்பட்டம் பெற்றுச் சக்கிரவர்த்தியானான். அவனுக்குச் குலசேகரன், நரசிங்க முனையரையன் மெய்ப் பொருள் என்று மூன்று பிள்ளைகள் தோன்றினர். அவர்கள் வளர்ந்து மணஞ் செய்விக்கப் பெற்றனர்.

தெய்வீகராஜன் சுமார் 70 வருஷங்கள் அரசாண்ட பின், தன் மூன்று மக்களிடத்தும் அரசாட்சியை ஒப்படைத்து விட்டு வீரட்டேச்சுவரர் ஆலயத்துக்கு அணித்தாக ஓர் மடம் அமைத்துக்கொண்டு நிஷ்டா பரனாக இருந்தான். அம்மடமே தற்போது பாணி பாத்திர தேசிகர் மடமாய்த் திகழ்கின்றது. முன்பு அது வீரண்ணன் கோயில் பெரிய பண்டாரத்து மடம் என்று வழங்கப்பட்டது.

குகமுனிவர் முருகப்பெருமான் அருளிய விமானத்தின் மேலமர்ந்து கந்தமாதன பர்வதத்தை அடைந்தார். தெய்வீகனும் தன் 76 வது வயதில் பழையபடி மலையரசனாகச் சித்தியடைந்து விட்டான். அவனுடன் தோன்றிய பச்சைக் குதிரையும் வீரட்ட நாதர் சந்நிதியில் 7 நாள் உண்ணாவிரத மிருந்து வலக்காதின் வழியாய் ஒரு ஜோதியாய்க் கிளம்பி விண்ணுலகம் சென்றது. உலகத்தவர் தெய்வீகனது பெருமையினைக் கண்டு வீரட்டநாதன் திருவருளை வியந்து தொழுதனர்.

..

### குலசேகரன்

மலைநாட்டின் கீழ்ப்பகுதியை ஆண்டவன் தெய்வீகன் முதல் புத்திரனான குலசேகரன். தன் மனைவி மதங்க மானியைத் துறந்து நன்னெறியடைய தலயாத்திரை செய்தனன். கும்பகோணத்துக்கு அண்மையில் வசித்த மூப்பி என்னும் ஒரு தவப்பெண்ணை மணந்து மூப்பன் என்னும் ஒரு மகனைப் பெற்று அவர்களையும் துறந்து கோவல்நகர் வந்து முத்தியடைந்தான். தந்தையைத் தேடிவந்த மூப்பனும் சிறிய தந்தையால் கொடுக்கப்பட்ட நாட்டை ஆண்டு, சில ஆண்டுகளின் பின் மறைந்தனன். அவன் வழிவந்தோரே 'மூப்பனார்' என்பர்.

### நரசிங்க முனையரையன்

மலைநாட்டின் மேற்பகுதியை ஆண்ட தெய்வீகனது இரண்டாவது புத்திரன் நரசிங்க முனையரையன். சிவபெருமான் பால் மிக்க அன்பு பூண்டவன். சிவதரிசனங் காரணமாகத் திருநாவலூருக்குச் சென்றபோது வீதியில் சிறு தேருருட்டி ஆடல் புரிந்து கொண்டிருந்த சுந்தரமூர்த்தி யடிகளைக் கண்டு, அன்பு கொண்டு, அவர் தந்தையின் உடன்பாட்டால் அம்மகவைப் புத்திரனாக ஏற்று வளர்த்து வந்தான். அவ்வடிகளைப் பெற்ற பேற்றினால் அவனுக்கு "ஆட்கொண்டான்" என்னும் ஓர் புத்திரன் உதித்தனன். தந்தைக்குப் பின் அரசு செலுத்தின கொங்கர் கோனாகிய 'வரபதி ஆட்கொண்டான்' என்பவன் இவனே. அவன் பாரதத்தைத் தமிழில் இயற்றுவித்தவன். அவன் சந்ததியார் "மலையமன்னர்" எனப்படுவர்.

### மெய்ப்பொருள் நாயனார்

இவரே 63 நாயன்மார்களில் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனார் என்பவர். தெய்வீக அரசனது 3 ம் புத்திரர். மலைநாட்டின் நடுப்பகுதியை ஆண்டவர். அரன்பாலும், அடியவர்பாலும் மிக்க அன்புடையவர். திருநீறே வீடளிக்கும் 'மெய்ப்பொருள்' என்று துணிந்தவர். தன்னை எதிர்த்த சமண அரசனான முத்திநாதன் என்பவனைப் பலகால் போரில் வென்றனர். இவரது அடியார் பக்தியை அறிந்த மாற்றான் திருநீறணிந்து வஞ்சகமாய் அடியார் வேடங்கொண்டு அரண்மனைக்குள் சென்று அரசனைத் தனியே இருக்கும்படிச் செய்து ஆகமத்தின் உண்மைப் பொருளை உபதேசிப்பவன் போல் நடித்து அவரைக் குத்திக் கொன்றான். உயிர் போகும் தறுவாயிலிருந்த நாயனார் அவ் வஞ்சகனைக் கொல்ல வந்த தத்தனும் காவலனை விலக்கி அவனுக்கு எவ்வித இடையூறும் நேரா வண்ணம் ஊருக்கு வெளியே அனுப்பச் செய்து தானே வினையை வென்றார். திருநீற்றின் பெருமையினை அரசியல் ஆயத்தாருக்கும் அருளிச் செய்து சிவபெருமான் திருவருளிற் கலந்தனர். இவர் குலத்தாரே 'நத்தமன்னர்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

## 11. விழாக்களும் விசேஷ தினங்களும்

ஏனைய பிரபல சிவாலயங்களில் நடப்பதுபோல் இவ்வாலயத்திலும் பஞ்சபருவ உற்சவங்கள் நடைபெறுகின்றன. பெருவிழா (பிரம்மோற்சவம்) மாசி மாதத்துச் சுக்கில பக்ஷத்தில் நடைபெறும். மாசி மாதத்து அனுட நாளில் ஸ்ரீ ஞானியார் மடாலயத்து

ஆதி குருமூர்த்தி குருபூஜா தினத்தன்று ஸ்ரீ வீரட்ட நாதர் அம்மையோடு எழுந்தருளிக் காட்சி தந்தருளுவர். ஆதி குருமூர்த்திகட்கு வீரட்டநாதர் விபூதிப்பையும், நிஷ்டானுபூதியும் கொடுத்தருளிய ஐதீக உற்சவம் ஆவணி மூலத்தன்று நடைபெறும். இவ்விரு திருவிழா நாட்களிலும் வீரட்டேசுவரர் பார்வதி சமேதராய் இடபாரூடராய் ஞானியார் மடாலயத்து ஆவணி மூல மண்டபத்தில் எழுந்தருளி உற்சவம் கொண்டருள்வார். கார்த்திகை சோமவாரம், நவராத்திரி, சிவராத்திரி, தைப்பூசம், வசந்த உற்சவம் முதலியனவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

## 12. இத்தலத்தைப்பற்றிக் கூறும் நூல்கள்

தேவாரம், திருக்கோவலூர்ப் புராணம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, சிறுபாணாற்றுப் படை, அண்ணாமலைச் சதகம், தனிப்பாடல் திரட்டு, யாத்திரானுகூலம், க்ஷேத்திர விளக்கம், குருபரம் பராப் பிரபாவம், நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், பெரியபுராணம், நிஷ்டாநுபூதி, புலவர் புராணம், ஔவையார் சரித்திரம், கடையெழு வள்ளல்கள், கபிலர், விநோதரச மஞ்சரி, திருப்புகழ், தென்னிந்திய சிலாசாசனங்கள், தென்னாற்காடு ஜில்லா கெஜட்டியர் முதலியன.

## 13. ஆராய்ச்சிக் குறிப்பு

ஆதியில் திருக்கோவலூரை ஆண்டவன் மலையமான் திருமுடிக்காரி. அவன் கடைச் சங்க காலத்தவன். இற்றைக்கு 1800 ஆண்டுகளுககு முற்பட்டவன். துஞ்சா முழவிற் கோவற் கோமான் மரபினன்;

114000

ஒரு சிற்றரசன். கொங்கு நாட்டின் ஒரு பகுதியும் இவனது ஆட்சியிலிருந்தது. இவனைப் பற்றி அகநானூறு, புறநானூறு, நற்றிணை, சிறுபாணாற்றுப்படை என்னும் சங்க நூல்களும் பல செய்திகள் கூறுகின்றன. "குடைகொள் வேந்தன்" என்று இவனைத் திருஞான சம்பந்தர் இத்தலத் தேவாரப் பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இக்காரி கடையெழுவள்ளல்களில் ஒருவன். இவனது மரபில் வந்தவனே தெய்வீகன் என ஆராச்சியாளர் துணிகின்றனர். ஒருசாரார் காரி என்னும் குதிரை முதலிய ஒப்புவமை கொண்டு திருமுடிக்காரியே 'தெய்வீகன்' என்கின்றனர். பாரி மகளிரைக் காரி மணந்தான் என்பதற்குக் கபிலரைப் பற்றிய திருக்கோவலூர்ச் சாசனம் சான்று பகருகிறது.

Ø93:38.9114,TK

தெய்வீகனுக்குப் பின் நடு நாட்டை மெய்ப்பொருள் வேந்தனும் நரசிங்க முனையரையரும் ஆண்டனரென்பதைத் திருக்கோவலூரிலும் சேந்தமங்கலத்திலுமுள்ள சிதைந்த கோட்டைக் கட்டிடங்கள் சில மெய்ப்பிக்கின்றன.

N49

தாண்டவராயப்(பிள்ளை) பிரபு என்பவர் இவ்வூரில் பெருங் கொடையாளியாயிருந்து "பாங்குயர் பளிக்'கு" என்று தொடரும் நமச்சிவாயப் புலவர் பாடலைப் பெற்றிருக்கிறார்.

## 14. சிலாசாசனம்

வீரட்டப் பெருமானைப் பற்றி 77 சிலாசாசனங்கள் இருக்கின்றன. (A. R. No. 236/1902) அவற்றுள் ஒன்று திருக்கோயிலின் மூலட்டானத்துத் தெற்குக் கிழக்கு வடக்குச் சுவர்களில் அகவற்பாவாக

அமைந்திருக்கிறது. இராஜ ராஜ சோழன் (கி. பி. 985 - 1013) தன் 27வது வயதில் வீரட்டேச்சுவரருக்கு நெல் 720 கலமும், 522 கலமும் விளையத்தக்க நிலம் விட்டதையும், அது கொண்டு நடந்த திருப்பணிகளையும் தெரிவிக்கிறது. அது "ஜய ஜய வென்று மொழி" என்று தொடங்கி 6 பகுதிகளையுடையதாய் "நலந்தரு பொன்னி நாடு கிழவோனே" என்று முடிகிறது. அதன் பின்பு இரண்டு வெண்பாக்களும் ஒரு விருத்தமும் உள்ளன. இவற்றால் சிவபெருமானுக்கு அவ்வரசன் பொற்பூவும், மணிப்பட்டமும், வெள்ளிப்பீடமும், தங்கக்கவசமும் அணிவித்தானென்பது அறியப்படுகிறது. ஷெ சாஸனத்தினால் திருக்கோவலூரிலும், மணம் பூண்டியிலும், ஆவியூரிலும், தேவின் குடியிலும் மான்யமிருந்தாகவும், யோகி ஒருவர் ஆலயத்தில் இருந்ததாகவும் தெரிகிறது.

மற்றைய சாசனங்களால் விளங்குபவை வருமாறு:— காந்தளூர் சாலை கலமறுத்த இராஜராஜ கேசரிவர்மன், ராஷ்ட்ரகூட குமார தேவன், இராஜ ராஜ தேவன், பரகேசரிவர்மன், ராஜராஜ கஜ கேசரி வர்மன், மலையமான் ராஜ சூடைய ராஜன், இராஜ கேசரிவர்மன், சோழன் கேரளதேவன், வீர ராஜேந்திர தேவன், ராஜேந்திரசோழ தேவன், குலோத்துங்க சோழ தேவன், வைதும்ப மஹாராஜ திருவாயனூர், செம்பியம் மிலாடுடையார், பாண்டியன் மாரவர்மன், கங்காபல்லவன், வேட்டவலத்து மாதளம்பாடி உடையான், விஜய விக்ரமநாடி விக்கிரமன், சோழன் மதுரை கொண்ட பரகேசரி வர்மன், விக்கிரம சோழ சேதியராயன் மனைவியும், தாயும், பாண்டியன் கோனேரி மால்கொண்டான், ராஜாதிராஜ தேவன்,

மகதைப் பெருமாள் மந்திரி, திருப்பாதிரிப்புலியூர் நெசவாளன், கிளியூர்ச் சேதிராயன், சிவபுரத்து நகரத்தார் மூவர், கணவதி மயிலாடியம்மையார், விஜயநந்தி விக்கிரம வர்மன், வேட்டுவேதிராயன் முதலிய மன்னர், செல்வந்தர், பெண்மணிகளாகிய பலருள், சிலர் விளக்குக்காக மாடு விட்டனர்; ஆடுகளைக் கொடுத்தனர்; நிலங்களைத் தானம் செய்தனர்; நித்திய நைமித்திக பூஜைக்காகப் பொன் கொடுத்தனர்; சிலர் நந்தவனப் பணி செய்வித்தவர்; வரிகளை ஒப்படைத்தவர் சிலர்; சேமத்தில் பல அணிகளை வைத்துக் காத்தவர் சிலர்.

கோவில் அறப்பாதுகாப்புப் பொதுச் சபையாரிடமிருந்தது, அச்சபை திருக்கோவலூர்ச் சதுர்வேதி மங்கலமென்னும் பொதுப் பெயருடையதாயிருந்தது. அதில் திருக்கோவலூர், மணம்பூண்டி, ஆவியூர், மருதூர் என்ற ஊரினர் அங்கத்தினராயிருந்தனர்.

## 15. மடங்கள்

இந்நகரில் மூன்று மடங்கள் உள்ளன.

### 1. ஸ்ரீ பாணி பாத்ர தேசிகராதீன மடம்

இதற்குப் பழைய பெயர் வீரண்ணன் கோயில் பெரிய பண்டாரத்து மடம்: இதுவே பார்க்கவ குல தெய்வீக மகாராஜா சமஸ்தான குருபீடம். இங்குக் குக முனிவரும், தெய்வீகனும், மெய்ப்பொருள் நாயனும், நரசிங்கமுனையரையரும் தம்முதுமைப் பருவத்தில் குருவோடு தங்கியிருந்து யோகம்செய்து வீடு பெற்றனர். இதன் மூல புருஷர் ஸ்ரீ பாணிபாத்ர தேசிகர். இவர் தினந்தோறும் பெண்ணைநதியில் நீராடிப் பாணியையே (நீரையே) பாத்திரமாக்கி ஜலம் கொணர்ந்து சிவபூஜைசெய்த காரணமாக இப்

பெயர் பெற்றனர் என்பர். ஊருக்கு மேல்புறத்திலிருக்கின்றமையின் தற்போது 'மேலமடம்' என்று வழங்கப்படுகிறது. மடாதிபர் இல்லறத்தினர்; வீர சைவர். இத் தல புராணத்தைப் புதுக்கிய சண்பகக்கொல்லை சௌந்திர ராஜ உடையார் குறிப்பிட்டிருக்கும் பார்க்கவ குலத்தவர் குருமடம் இதுவே.

2. ஸ்ரீ ஞானியார் மடாலயம்

இத் திருமடம் வீரட்டானத்துக்கு அண்மையில் ஊரின் கீழ்ப்புறத்திலிருப்பதால் கீழமடம் என அழைக்கப்படுகிறது. இதன் ஸ்தாபகர் ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள். திருவண்ணாமலை குகை நமச்சிவாய மடத்து ஆறும் பட்டத்து மூர்த்திகளால் தீக்ஷை பெற்று வந்து கோவல் வீரட்டேச்சுவரரால் ஆட்கொள்ளப் பெற்றவர். வீரட்ட நாதரால் வடமொழியிலுள்ள ஙிஷ்டானுபூதியைப் பெற்று அதனைத் தமிழில் இயற்றியவர். இமசேது பரியந்தம் தல யாத்திரை செய்து அநேக சீடர்களையுடையவர். இவரது ஞான பரம்பரையில் இம்மடத்து 5-வது பட்டம் குருமூர்த்தியுமான ஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார் என்பவர் பல சித்திகளைப் பெற்றவர். இவர் தமிழ் நாடு முழுவதும் யாத்திரை சென்று சொன்மாரிப் பொழிந்து, சைவம், தமிழ், கடவுள்பக்தி முதலியவற்றை வளர்த்தவர். தற்போது 6 வது பட்டத்தில் அமர்ந்துள்ளவர் அவர்பால் கல்விகற்று, உபதேசம் பெற்று, அம்மடாலயத்திலுள்ளவருமான சிவஷண்முக சத்தியஞான சிவாச்சாரியார் என்பவர். இவர் தம்பாற் சார்ந்த அன்பர்களுக்கு 12 திருமுறைகளையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் அன்புடன் போதித்து வருகின்றனர்.

இதனைச் சார்ந்த தொருமடம் திருப்பாதிரிப்புலியூர் ஸந்நிதி வீதியிலுள்ளது.

3. கல்மடம்

இது தற்போது மறைந்த நிலையிலிருக்கிறது. சிதைந்த கட்டடத்தின் சில அறிகுறிகளே காணப் படுகின்றன. இது கருணீகர்க்குரிய மடமாயிருந்தது.

## 16. திருக்கோவலூரிலுள்ள இதர ஆலயங்கள் முதலியன

1. விநாயகர் ஆலயம்

இது பெண்ணை நதிக்கரையில் இருக்கிறது. இவ் விநாயகரை வெள்ள விநாயகர் என்று கூறுகின்றனர். பெண்ணையின் வெள்ளத்தை ஊரிற்புகா வண்ணம் காத்தமையால் பெருமானுக்கு இப்பெயர் வந்தது போலும். பெருமான் மிகவும் வரப் பிரசாதி என்பது தினந்தோறும் முக்கியமாக வெள்ளிக்கிழமைகளில் தரிசனத்துக்காக வரும் ஜனக்கூட்டத்தாலும், உடை படும் தேங்காய்களாலும் தெரிய வருகிறது. இக் கோயிலில் சுமார் 8 அடி உயரமுள்ள ஒரு பெரிய சிவ லிங்கம் காணப்படுகிறது. இது இவ்வூரிலுள்ள பெருமாள் கோயிலிலிருந்து பிறகு ஜீயர் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டு இங்குப் பக்தர்களால் கொண்டு வந்து வைக்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள். இந்தச் சிவலிங்கத்துக்குத் தகுந்த அளவில் ஒரு பெரிய இடபமும் கீழையூர் தெற்கு வீதியிலுள்ள ஒரு வீட்டின் தோட்டத்தில் காணப்படுகிறது.

2. கபிலர் குன்று

அறுபதினாயிரம் சகரர்களை அழித்த கபிலர் அதனால் வந்த வீரஹத்தியைப் போக்கிக் கொள்ள

திருக்கோவலூரையடைந்து சிவபெருமானை வழிபட்டு அப் பெருமான் கோவிலுக்கு வடபுறமுள்ள தெய்வ பிநாகினி என்னும் பெண்ணை யாற்றில் தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அங்குள்ள பெரும் பாறையின்மேல் கபிலேசுரர் என இலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்து தவம் செய்தார். அவ்விடமே கபிலர் குன்று என்றும் இடைச்சிக் குன்று என்றும் வழங்கப்படுகிறது.

இப்பாறையின் பக்கத்திலுள்ள பரந்த பாறை ஸ்ரீ ஞானியார் மடத்து ஆதிகுரு மூர்த்திகள் சிவலிங்க பூசை செய்தவிடம். பெருமானிடம் விபூதிப் பையும், நிஷ்டானுபூதியும் பெற்ற இடம் அதுவே. அந்தத் துறையில் நீராடி, திருநீறு தரித்துத் திருவண்ணாமலையினையும், அறையணி நல்லூர்க் கோயிலையும், கோவல் வீரட்டானத்தையும் தரிசித்தல் மிக்க விசேட புண்ணியத்தைக் கொடுக்கவல்லது.

### 3. பெருமாள் கோயில்

இத்தலம் 108 வைஷ்ணவத்திருப்பதிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. வைணவச் சம்பிரதாயப்படி இதனைக் கோபாலபுரம் என்று கூறுகின்றனர். பெருமாள் பெயர் திரிவிக்ரமப் பெருமாள், உலகளந்த பெருமாள், தேகளீசன் என்பனவாகும். இங்கே மகாபலிச்சக்கிரவர்த்தி யாகம் செய்த பொழுது திருமால் வாமனராக வந்து மூன்றடி மண் யாசித்துப் பிறகு விஸ்வரூபங்கொண்டு மண்ணுலகையும், விண்ணுலகையும் அளந்து மூன்றாவதடியால் மாபலியைப் பாதாளத்தி லழுத்தியருளினர். இக் கோயிலில் 18 சிலாசாஸனங்கள் இருக்கின்றன. இவ்வாலய நிர்வாகம் மதுராந்

தகச் சதுர்வேதிமங்கலச் சபையாரிடமிருந்ததாம் தற்போது 72 சிங்காதனுதிபதிகளுள் ஒருவரான ஜீய ரால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இவர் மடம் ஜீயர் மடம் எனப்படும். இவர்கள் இல்லறத்தினர்.

முதலாழ்வார்களான பொய்கை, பேய், பூதம், என்ற ஆழ்வார்கள் மூவரும் ஓர் இருக்கையின் (இடைகழியில்) நடையில் கூடியிருந்த பொழுது, அத் தருணத்தை எதிர்பார்த்திருந்த விஷ்ணு மூர்த்தி அங் கெழுந்தருளித் தரிசனந் தந்தனர். அவர்களும் "அன் பே தகளியா ஆர்வமே நெய்யாக" என்று தொடங் கும் பாடல் முதலாகப் பல பாசுரங்களை அருளிச் செய் தனர். இந்தக் கோயிலில் பிரம்மோற்சவம் பங்குனி மாதம் நடைபெறும். மாசி மகக் கடலாட, பெரு மாள் கூடலூருக்கு எழுந்தருளுவார். இந்த ஆல யத்தில் ஒரு யானையும் இருக்கிறது. பெரிய திருமொழியிலே திருமங்கையாழ்வாரும் இப் பெரு மாளுக்கு மங்களா சாஸனம் செய்திருக்கின்றனர். இங்குள்ள கோபுரமும், தாயார் சந்நிதி மண்டபமும் சிற்ப சாஸ்திர முறைக்குப் பெரிதும் எடுத்துக் காட்டாயிருக்கின்றன. தென்னிந்தியாவில் இவையே பெரியவை.

### 4. பிருந்தாவனம்

இது பெண்ணையாற்றுக்கு வடகரையில் திருக் கோவலூர்த் துறைக்கு எதிர்த் துறையில் மணம் பூண்டியைச் சார்ந்துள்ளது. இங்குத் துவைத மத மடாதிபதியான ஆச்சாரியார் ரகூத்தம ஸ்வாமிகள் சித்தியடைந்திருக்கிறார். தென்னிந்திய மத்வர்களால் கொண்டாடப்படும், இத் தெய்வ ஸாந்நித்திய மிக்க

இடத்தில் ஆண்டு தோறும் வைகுண்ட ஏகாதசி, துவாதசி தினங்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. இங்கே ஒரு துளசி மாடமும் நெல்லிமரமும் இருக்கின்றன. ஒரு ஹனுமான் கோயிலும், அரசும் வேம்பும் பிரதிஷ்டை செய்த மேடையும் காணப்படுகின்றன. மிகப் பழமையான புளியமரம் ஒன்றும் பெரிய பொந்துகளுடன் இருக்கிறது. இந்தப் பிருந்தாவனத்தைச் சேவை செய்து வாழ்க்கைத் துன்பங்கள் தணிந்து அமைதி பெற்று வருபவர் பலர்.

5. *அறையணி நல்லூர்*

இந்தச் சிவக்ஷேத்திரம் திருக்கோவலூர் புகை வண்டி நிலையத்தைச் சார்ந்துள்ளது. இதனை அறகண்ட நல்லூர் என்று வழங்குகிறார்கள். படர்ந்த பாறையின் மீது சிவாலயம் சிறக்க அமைந்திருப்பதே பெரிய கண் கொள்ளாக் காட்சியாகும். திருக்கோவல் வீரட்டானத்துக்கு எதிர்க் கரையிலுள்ள இத்தலமும் திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப் பெற்றிருக்கிறது. திருவண்ணாமலை ரமணரிஷிகள் இவ்வாலயத்தில் தவங்கிடந்த போதுதான் அவருக்கு ஜோதி தரிசனம் கிடைத்ததென்றும் பின்னர் திருவண்ணாமலைக்குச் சென்றார் என்றும் சொல்லப்படுகிறது.

சுவாமி சந்நிதி மேற்கு முகமாயிருக்கிறது. அம்பிகை சந்நிதி கிழக்கு முகம். ஆனால் கோபுரம் தெற்கு முகமாக அமைந்துள்ளது. இவ்வாலயத்திலும் அநேக கல்வெட்டுகள் காணப்படுகின்றன. புராதன விக்கிரகங்கள் பூமியினின்றும தோண்டி எடுக்கப்பட்டு இவ்வாலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள முருகப் பெருமானுக்கு ஒரு தலையும் 10 கைகளும் இருக்கின்றன.

இங்குப் பஞ்சபாண்டவர்கள் சிலகாலம் வசித்தார்கள் என்று கூறுகின்றனர். பாறையின் தென்புறத்தில் மகேந்திர பல்லவன் குகைக் கோயில் போல ஐந்து அறைகள் (விடுதிகள்) காணப்படுகின்றன. அவற்றைப் பஞ்ச பாண்டவர் குகை என்று அழைக்கின்றனர். அதன் கீழ்ப் பாகத்திலுள்ள இடம் திரௌபதி தங்கின இடமாம். ஆலயத்தின் தென்பாரிசத்தில் பாறையின்மீது ஒரு பெரிய சுனை காணப்படுகிறது. அதன் ஜலம் ஆலயத்திற்கு அபிஷேக தீர்த்தமாகவும் அவ்வூரிலுள்ளார் அனைவருக்கும் குடி ஜலமாகவும் உபயோகப்படுகிறது. அதில் தாமரை முளைத்திருக்கிறது. அந்தச் சுனை திரௌபதி ஸ்நானம் செய்ய பீமனால் அகழ்ந்தெடுக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அப்படி அகழ்ந்த கற்களைக் கொட்டின இடத்தை "வீமன் குன்று" எனக் குறிப்பிடுகின்றனர். இப் பாறையின் மீதிருந்தே திருஞான சம்பந்தர் "பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்" என்ற தேவாரத்தால் திருவண்ணுமலையைப் பாடினுர். இங்கிருந்தபடி திருவண்ணுமலையை உச்சி முதல் அடிவரையில் தரிசிக்கலாம். இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் பெயர் - அறையணி நாதேஸ்வரர். அம்மையார் - அருள் நாயகி. ஆலயத்தின் மேற்பால் பெண்ணை நதியில் ஒரு பாறை காணப்படுகிறது. அதனை "நீலகண்டன் பாறை" என வழங்குகின்றனர். அப் பாறையின்மீது சிறிதும், பெரிதுமாக பல அடிச்சுவடுகள் போன்ற பள்ளங்கள் காணப்படுகின்றன. "அவற்றைப் பஞ்ச பாண்டவர்கள் அடிச்சுவடுகள்" என்றும், அவர்கள் விளையாடின இடம் என்றும் கூறுகின்றனர்.

## 17. தேவாரத் திருப்பதிகங்கள்

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய திருப் பதிகத்தில் உள்ள பாடல்கள் 11. அவைகள் ஒவ்வொன்றும் சிவபெருமானுடைய அடையாளங்களையும் அவரது இயல்புகளையும் கூறி முடிவில் மக்கள் நற்கதியடைய அத்தகைய பெருமான் எழுந்தருளியிருக்கும் வீரட்டானத்தைச் சேரும்படி உபதேச முறையில் அமைந்துள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த பதிகம் 1. 10 திருப்பாடல்களை யுடையது. அவைகள் உலக மக்களுக்கு உபதேசம் செய்யும் முறையில் தனது வாழ்க்கையின் சிறுமையையும் பெருமானுடைய மேன்மையையும் குறித்துப் பேசுவதுபோல் தொனிக்கின்றன.

## 18. பெருமானது அடையாளங்கள்

விடையேறி, இடபக் கொடி யுடையவன், கொன்றை சூடி, கங்காதரன், வினையை வென்ற வேடத்தான், கோவண ஆடையான், வீடு காட்டு நெறியினன், வெண்ணீற்றன், வேத மோதுநெறியினன், உமைபாகன், குழகன், நீலகண்டன், பிரம விஷ்ணுக்களால் அறியப்படாதவன், பூதப் படையினன் முதலியன.

## 19. திருஞானசம்பந்தர் உபதேசம்

மனம் வெள்ளத்தினூடே செல்லும் துரும்பு. நிலையில்லாதது. விஷயாதிகளில் அதிக பற்றுள்ளது. அப்படிப்பட்ட மனத்தை விளித்து உபதேசம் செய்கிறார். முற்பிறப்பில் செய்த தவப்பயனால் உலகில்

கிடைத்தற்கரிய மானுட உடலைப் பெற்றீர்கள். ஆனால் அதனால் அடையவேண்டிய பயனை அடைய வில்லை. உடம்பு வினைக்கீடாயது; நிலையற்றது; பல விதமான நோய்களுக்கு இருப்பிடமானது. நரை, திரை, மூப்பு, சாக்காடு முதலிய கேடுகளை அடையக் கூடியது. இப்பேர்ப்பட்ட உடலைச் சாஸ்வதம் என்று எண்ணி, அதனைச் சிறந்த பொருள் என்று மைய லெய்தி, அதனை ஓம்புவதற்கு அல்லும் பகலும் படாத பாடு படுகிறீர்கள். பிச்சை கூட எடுக்கத் துணிகின் றீர்கள். பல கொடிய நோய்களால் துன்பமடையும் போதும், உரையும் பாட்டும் தளர்வெய்தி நரை திரை யுடன் மூப்பு வந்தபோதும் நம்மவர்களே நம்மைப் பரி காசம் செய்கிறார்கள். ஆதலால் இந்த உடம்பு உள்ள போதே சுக போகங்களில் மூழ்கிப் பின் மீள வழியின்றி அவதியுறாமல், இறுதிக் காலத்தில் பாசக் கயிற்றுடன் எமதூதர்கள் வந்து உயிரைக் கவரும்போது எவரா லும், எவ்விதத்தாலும் தடுக்கமுடியாது. ஆகையினாலே, நமது துன்பங்களை எல்லாம் போக்கிச் சுகத்தைக் கொடுக்கவல்ல இறைவனாகிய சிவபெருமான் விரும்பி உறையும் இடமாகிய திருக்கோவலூர் வீரட்டானத்தை அடைந்து வழிபாடு செய்யுங்கள். அப்போதுதான் நீங்கள் இந்த மனித உடம்பைப் பெற்ற பயனை அடை வீர்கள்.

## 20. அப்பர் உபதேசம்

நான் சத்தில்லாத பயனற்ற குப்பையை ஒத்தவன். நாய்போன்று ஒதுக்கப்பட்டவன். குணமிலி. குற்ற முள்ளவன். அழுக்குக்கிருப்பிடமாகிய நவத்துவாரங் கள் கொண்ட உடம்பைப் போற்றி வளர்க்கின்றேன்.

பூமிக்குப் பாரமாகப் பிறந்து, பஞ்சேந்திரியங்களின் வசப்பட்டு, அவற்றைத் திருப்தி செய்யும் வகையில் ஈடுபட்டு மனம்போனவாறு நடந்து பாசவலையில் சிக்கி, மக்களே சுற்றமென்றுக்கருதி வாழ்நாளை யெல்லாம் வீணுளாக்கி விட்டேன். படைகள்போல் வினைகள் வந்து என்னைப்பற்றிக்கொண்டபடியினுலே அறிவழிந்து பிறருக்குச் சுமையாய் யாசகம் செய்வது தவிர, ஒருவருக்கும் என்னுல் யாதொரு பிரயோசனமுமின்றித் துக்கமாகிய படுகுழியில் வீழ்ந்து மீள வழியின்றி அவதிப்படுகின்றேன். எனக்குப் புகலிடம் வேறில்லை. யான் என்ன செய்வது? இறைவா உன்னை நான் வழிபட வில்லையே? பரிசுத்தனுக உன்னை நினைத்து ஏத்தவில்லையே? மலர் கொண்டு அர்ச்சிக்கவில்லையே? உன்னிடம் பரிபூரண அன்பைச் செலுத்தவில்லையே; ஏ! கருணுமூர்த்தி. திருக்கைலாயத்தைப் பெயர்த்து பார்வதியம்மையாருக்கும் நடுக்கத்தை உண்டாக்கிய மகாபாவியாகிய இராவணனுக்கும் கருணை செய்த அருட்கடலே! உன்னையன்றி எனக்கு வேறுகதியில்லை. ஆதலால் தேவரீரே அடியேனும் உய்ந்து பிறவிக் கடலினின்றும் கரையேறும் வழியைக் காட்டியருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்யும் மூலமாக உலகமக்களுக்கு நன்னெறியைப் போதிக்கிருர்.

அப்பர் மிகவும் அனுபவசாலி. சிவபெருமான் அருளை நிரம்பப்பெற்றவர். 81 வருஷம் இம்மண்ணுலகில் வாழ்ந்தவர். பலகலைகளை ஆய்ந்தவர். சமண சமயத்திற் புகுந்து அதில் ' தருமசேனர் ' என்னும் சிறந்த பட்டம் பெற்று மேம்பாடு அடைந்திருந்தும் அம்மதத்திலுள்ள கடவுள் நம்பிக்கை இல்லாமை,

பிறசமய தூஷணை முதலிய கேடுகளை அறிந்து, உண்மை உணர்ந்து சைவ சமயத்தைச் சார்ந்து சிவ பெருமானுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றாலும் தொண்டு செய்தவர். பகைவர்களால் பற்பல இடுக்கண் நேர்ந்த காலத்தும் இறைவனிடமுள்ள பக்தியின் உறைப்பினால் "நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற மனத்திட்ப முடையவர். செயற்கரிய பற்பல செயல்களைச் செய்தவர். அப்பூதி யடிகளாம் அந்தணர் "திருநாவுக்கரசு" என்னும் பெயரைச் சொல்லி உய்ந்தார் என்றால் வேறுசான்று வேண்டியதில்லை. நாமெல்லோரும் அப் பெரியாரின் அடியைப் பின்பற்றி நடந்து எல்லாம்வல்ல இறைவன் அருளைப்பெற முயல்வோமாக.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - தேவாரம்

### திருவிராகம் ; பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

படைகொள் கூற்றம்வந்து மெய்ப்பாசம் விட்டபோதின்கண்
இடைகொள் வாரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதைகுழகன் கோவலூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே. 1

கரவலாளர் தம்மனைக் கடைகடோறுங் கானிமிர்த்
திரவலாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டில்நீர்
குரவமேறி வண்டினங் குழலோடி யாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே. 2

உள்ளத்தீரே போதுமின் னுறுதி யாவதறிதிரேல்
அள்ளற் சேற்றிற் காலிட்டிங் கவலத்துள் அழுந்தாதே
கொள்ளப் பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினான் வீரட்டானஞ் சேர்துமே. 3

கனைகொளிருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனையபலவு மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற் பழனஞ் சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான் வீரட்டானஞ் சேர்துமே. 4

உளங்கொள் போகமுய்த்திடா ருடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாடொறுந் துயரலாழி நெஞ்சமே
வளங்கொள் பெண்ணைவந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விளங்குகோவ ணத்தினான் வீரட்டானஞ் சேர்துமே. 5

கேடு மூப்புச் சாக்காடு கெழுமி வந்து நாடொறும்
ஆடுபோல நரைகளா யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற் குழகன் கோவலூர் தனுள்
வீடுகாட்டு நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. 6

உரையும்பா ட்டுந்தளர் வெய்தி யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர் நமர்க ளாதலால்

வரைகொள் பெண்ணைவந்துலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர் வெண்ணீற்றினான் வீரட்டானஞ் சேர்துமே. 7

ஏதமிக்க மூப்பினோ டிருமலீளை யென்றிவை
ஊதலாக்கை யோம்புவிர் உறுதியாவ தறிதிரேல்
போதில்வண்டு பண்செயும் பூந்தண் கோவலூர்தனுள்
வேதமோது நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. 8

ஆறுபட்ட புன்சடை யழகனா யிழைக்கொரு
கூறுபட்ட மேனியான் குழகன் கோவலூர்தனுள்
நீறுபட்ட கோலத்தான் நீலகண்ட னிருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானஞ் சேர்துமே. 9

குறிகொளாழி நெஞ்சமே கூறைதுவ ரிட்டார்களும்
அறிவிலாத அமணர்சொல் லவத்தமாவ தறிதிரேல்
பொறிகொள் வண்டுபண்செயும் பூந்தண் கோவலூர்தனுள்
வெறிகொள் கங்கை தாங்கினான் வீரட்டானஞ் சேர்துமே. 10

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
பழிகடீரச் சொன்னசொற் பாவநாச மாதலால்
அழிவிலீர் கொண்டேத்துமின் னந்தண் கோவலூர்தனுள்
விழிகொள் பூதப்படையினான் வீரட்டானஞ் சேர்துமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்ஷேத்திரக் கோவை

திருச்சிற்றம்பலம்

அட்டான மென்றோதிய நாலிரண்டு
மழகன்னுறை காவனைத்துந் துறைகள்
எட்டாந் திருமூர்த்தியின் காடொன்பதுங்
குளமூன்றுங் களமஞ்சும் பாடிநான்கும்
மட்டார் குழலாண் மலைமங்கை பங்கன்
மதிக்கும் மிடமாகிய பாழிமூன்றும்
சிட்டானவன் பாசூர் என்றே விரும்பாய்
அரும்பாவங்க ளாயின தேய்ந்தறவே.

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் - தேவாரம்

## திரு நேரிசை

### திருச்சிற்றம்பலம்

செத்தையேன் சிதம்ப நாயேன் செடியனே னழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிட மறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கே னிருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே கோவல்வீ ரட்ட னீரே. 1

தலைசுமந்திருகை நாற்றித் தரணிக்கே பொறைய தாகி
நிலையிலா நெஞ்சந் தன்னு ணித்தலு மைவர் வேண்டும் [தேன்
விலைகொடுத் தறுக்க மாட்டேன் வேண்டிற்றேவேண்டியெய்த்
குலைகொண் மாங்கனிகள் சிந்துங்கோவல்வீ ரட்ட னீரே. 2

வழித்தலைப்படவு மாட்டேன் வைகலுந் தூய்மை செய்து
பழித்திலேன் பாச மற்றுப் பரமநான் பரவ மாட்டேன்
இழித்திலேன் பிறவி தன்னை யென்னினைந் திருக்க மாட்டேன்
கொழித்துவந் தலைக்குந் தெண்ணீர்க் கோவல்வீ ரட்ட னீரே.3

சாற்றுவ ரைவர் வந்து சந்தித்த குடிமை வேண்டிக்
காற்றுவர் கனலப் பேசிக் கண்செவி மூக்கு வாயுள்
ஆற்றுவ ரலந்து போனே னாதியை யறிவொன் றின்றிக்
கூற்றுவர் வாயிற் பட்டேன் கோவல்வீ ரட்ட னீரே. 4

தடுத்திலே னைவர் தம்மைத் தத்துவத் துயர்வு நீர்மைப்
படுத்திலேன் பரப்பு நோக்கிப் பன்மலர்ப் பாதமுற்ற
அடுத்திலேன் சிந்தை யார ஆர்வலித் தன்பு திண்ணங்
கொடுத்திலேன் கொடியவா நான்கோவல்வீ ரட்ட னீரே. 5

மாச்செய்த குரம்பை தன்னை மண்ணிடை மயக்க மெய்து
நாச்செய்து நாலு மைந்தும் நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயந் தன்னு ணித்தலு மைவர் வந்து
கோச்செய்து குமைக்க வாற்றேன் கோவல்வீ ரட்ட னீரே. 6

படைகள்போல் வினைகள் வந்து பற்றியென் பக்க னின்றும்
விடகிலா வாத லாலே விகிர்தனை விரும்பி யேத்தும்

இடையிலே னென்செய்கேனா ளிரப்பவர் தங்கட் கொன்றுங்
கொடையிலேன் கொள்வதே நான் கோவல்வீ ரட்ட னீரே. 7

பிச்சிலேன் பிறவிதன்னைப் பேதையேன் பிணக்க மென்னுந்
துச்சுளே யழுந்தி வீழ்ந்து துயரமே யிடும்பை தன்னுள்
அச்சனா யாதிமூர்த்திக் கன்பனாய் வாழ மாட்டாக்
கொச்சையேன் செய்வ தென்னே கோவல்வீ ரட்ட னீரே. 8

நிணத்திடை யாக்கை பேணி நியமஞ் செய்திருக்க மாட்டேன்
மணத்திடை யாட்டம் பேசி மக்களே சுற்ற மென்னுங்
கணத்திடை யாட்டப் பட்டுக் காதலா லுன்னைப் பேணுங்
குணத்திடை வாழ மாட்டேன் கோவல்வீ ரட்ட னீரே. 9

விரிகட லிலங்கைக் கோனை வியன் கயிலாயத் தின்கீழ்
இருபது தோளும் பத்துச் சிரங்களும் நெரியவூன்றிப்
பரவிய பாடல் கேட்டுப் படைகொடுத்தருளிச் செய்தார்
குரவொடு கோங்கு சூழ்ந்த கோவல்வீ ரட்டனாரே. 10

திருச்சிற்றம்பலம்

## திருக்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்,
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முளையூர் பழையாறை சத்திமுற்றங்,
கல்லிற்றிகழ் சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்—தேவாரம்

## திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும், பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கோத் திட்டையுங் கோவலுங் கோயில் கொண்டீருமைக்
கொண் டுழல் கின்றதோர் கொல்லைச் சில்லைச்
சேத்திட்டுக் குத்தித் தெருவே திரியுஞ்
சில்பூதமு நீருந் திசை திசையன
சோத்திட்டு விண்ணோர் பலருந் தொழ நும்
மரைக் கோவணத் தோடொருதோல் புடை சூழ்ந்
தார்த் திட்டதும் பாம்பு கைக் கொண்டதும் பாம்
படிகே ளுமக்காட் செய வஞ்சுதுமே.

திருச்சிற்றம்பலம்

## திரு இடையாற்றுத் தொகை, பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

பேறனூர் பிறைச் சென்னியினன் பெருவேளூர்
தேறனூர் திருமா மகள் கோன்றிரு மாலோர்
கூறனூர் குரங்காடு துறைதிருக்கோவல்
ஏறனூர் எய்தமா னிடையாறிடைமருதே.

திருச்சிற்றம்பலம்

## திருநாட்டுத் தொகை, பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்க லான்
கூழை யேறுகந்தா னிடங் கொண்டதுங் கோவ லூர்
தாழையூர் தகடூர் தக்களூர் தரும புரம்
வாழைகாய்க்கும் வளர் மருக னாட்டு மருகலே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கலயுநல்லூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

செருமேவு சலந்தரனைப் பிளந்த சுடராழி
செங்கண் மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன் மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள் முறித்த இறையவனூர் வினவில்
பெருமேதை மறையொலியும் பேரி முழவொலியும்
பிள்ளையினம் துள்ளி விளையாட் டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டகக் கயல் மண்டக் கமலம்
களிவண்டின் கணம் இரியுங் கலயநல்லூர் காணே.

திருச்சிற்றம்பலம்

## 10-ம் திருமுறை - திருமூலர் திருமந்திரம்
## பதிவலியில் வீரட்டம் எட்டு

திருச்சிற்றம்பலம்

கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய்தா னென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டு கொன்றனே.

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனர் புராணம் (கசஅ)

திருச்சிற்றம்பலம்

திருவதிகைப் பதி மருங்கு திருவெண்ணெய் நல்லூரும்
அருளு திரு ஆமாத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதி பிறவும் வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப்புடன்விடையார்மகிழ்பெண்ணுகடம்அணைந்தார்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் (கசூஎ-கசூஅ)

சென்றணைந்துசிந் தையின்மகிழ் விருப்பொடு
திகழ்திரு ஆமாத்தூர்ப்
பொன்றயங்குபூங் கொன்றையும் வன்னியும்
புனைந்தவர் அடிபோற்றிக்
“குன்ற வார் சிலை” எனுந்திருப் பதிகம்மெய் குலவிய
இசைபாடி
நன்றும் இன்புறப் பணிந்துசெல் வார்திருக் கோவலூர்
நகர் சேர்ந்தார்.

கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குறைகழல்
பணிந் தேத்தி
ஆவின் ஐந்துகந் தாடுவார் அறையணி நல்லூரை
அணைந் தேத்திப்
பாவ லர்ந்த செந்தமிழ் கொடு பரவுவார்
பரவுசீ ரடியார்கள்
மேவும் அன்புறு மேன்மையாம் தன்மையை
விளங்கிட அருள் செய்தார்.

திருச்சிற்றம்பலம்

## அருணகிரிநாதர்—திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

பாவ நாரிகள் மாமட மாதர் வீணிக ளாணவ
பாவை யாரிள நீரன முலையாலும்
பார்வை யாமிகு கூரயி லாலு மாமணி யார்குழை
பார காரன வார்குழல் அதனாலும்
சாவ தாரவி தாரமு தார்த ராவித மூலித
சாத மூரலி தாமதி முகமாலும்
சார்வ தாவடி யேனிடர் வீற மாலறி வேமிகு
சார மாயதி லேயுறல் ஒழிவேனோ

ஆவ வார்வன நான்மறை ஆதி மூலப ராவரி
ஆதி காரணி தாகிய பரமேச
ஆதி யாரருள் மாமுரு கேச மால்மரு கேசுர
ஞதிதேவர்க ளியாவர்கள் பணிபாத
கோவதாமறை யோர்மறை யோது மோதம்வி முாவொலி
கோடி யாகம மாவொலி மிகவீறும்
**கோவை மாநகர் மேவிய வீரவேலயி லாயுத**
கோதை யானையி ஞேடமர் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

---

## பெரிய திருமொழி - திருமங்கையாழ்வார்

மஞ்சாடு வரையேழும் கடல்க ளேழும்
வானகமும் மண்ணகமும் மற்று மெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோர்
இளந்தளிரிற் கண்வளர்ந்த ஈசன்தன்னைத்
துஞ்சாநீர் வளஞ் சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்யச்
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுட் கண்டேன் நானே,

* * * *

வாரணங்கொள் இடர்கடிந்த மாலை நீல
மரகதத்தை, மழைமுகிலே போல்வான் றன்னைச்
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவ லூரதனுட் கண்டே னென்று
வாரணங்கு முலைமடவார் மங்கை வேந்தன்
வாட்கலிய னொலியைந்தும் ஐந்தும் வல்லார்
காரணங்க ளாலுலகம் கலந்தங் கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே.

---

## அறையணிநல்லூர் தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சடலைநீறணிந் தாரழல்
ஆடினாரறை யணிநல்லூ ரங்கையாற்றொழு வார்களே. ௧

இலையினார்சூல மேருகந் தேறியேயிமை யோர்தொழ
நிலையினாலொரு காலுறச் சிலையினால்மதி லெய்தவன்
அலையினார்புனல் சூடிய அண்ணலாரறை யணிநல்லூர்
தலையினாற்றொழு தோங்குவார் நீங்குவார் தடு மாற்றமே. ௨

என்பினார்கனல் சூலத்தா ரிலங்குமாமதி யுச்சியான்
பின்பினாற்பிறங் குஞ்சடைப் பிஞ்ஞகன்பிறப் பிலியென்று
முன்பினார்மூவர் தாந்தொழு முக்கண்மூர்த்திதன் தாள்களுக்
கண்பினாரறை யணிநல்லூ ரங்கையாற்றொழு வார்களே. ௩

விரவுநீறுபொன் மார்பினில் விளங்கப் பூசிய வேதியன்
உரவுநஞ்சமு தாகவுண் டுறுதிபேணுவ தன்றியும்
அரவுநீள்சடைக் கண்ணியா ரண்ணலாரறை யணிநல்லூர்
பரவுவார்பழி நீங்கிடப் பறையுந் தாஞ்செய்த பாவமே. ௪

தீயினார்திகழ் மேனியாய் தேவர்தாந்தொழு தேவன்நீ
ஆயினாய்கொன்றை யாயன லங்கையாயறை யணிநல்லூர்
மேயினார் தமதொல்வினை வீட்டினாய்வெய்ய காலனைப்
பாயினாயதிர் கழலினாய் பரமனேயடி பணிவனே. ௫

விரையினார் கொன்றை சூடியும் வேகநாகமும் வீக்கிய
அரையினாரறை யணிநல்லூ ரண்ணலாரழ காயதோர்
நரையினார்விடை யூர்தியார் நக்க னார்நறும் போதுசேர்
உரையினாலுயர்ந் தார்களு முறையினாலுயர்ந் தார்களே. ௬

வீரமாகிய வேதியர் வேகமாகளி யானையின்
ஈரமாகிய வுரிவைப்போர்த் தரிவைமேற்சென்ற எம்மிறை
ஆரமாகிய பாம்பினா ரண்ணலாரறை யணிநல்லூர்
வாரமாய்நினைப் பார்கள்தம் வல்வினையவை மாயுமே. ௭

தக்கனார்பெரு வேள்வியைத் தகர்த்துகந்தவன்- தாழ்சடை
முக்கணான்மறை பாடிய முறைமையான்முனி வர்தொழ
அக்கினோடெழி லாமைபூ ணண்ணலாரறை யணிநல்லூர்
நக்கனாரவர் சார்வலானல்கு சார்விலோம் நாங்களே. ௮

வெய்யநோயிலர் தீதிலர் வெறியராய்ப்பிறர் பின்செலார்
செய்வதேயலங் காரமா மிவையிவைதேறி யின்புறில்
ஐயமேற்றுணுந் தொழிலரா மண்ணலாரறை யணிநல்லூர்ச்
சைவனாரவர் சார்வலால் யாதுஞ்சார்விலோம் நாங்களே. ௯

வாக்கியஞ்சொல்லி யாரொடும் வகையலாவகை செய்யன்மின்
சாக்கியஞ்சம ணென்றிவை சாரேலும்மா ணம்பொடி
ஆக்கியம்மழு வாட்படை யண்ணலாரறை யணிநல்லூர்ப்
பாக்கியங்குறை யுடையீரேற் பறையுமாஞ்செய்த பாவமே, ௧௦

கழியுலாங்கடற் கானல்சூழ் கழுமலமமர் தொல்பதிப்
பழியிலாமறை ஞானசம் பந்தன்நல்லதோர் பண்பினார்
மொழியினாலறை யணிநல்லூர் முக்கண்மூர்த்திதன் தாள்தொழக்
கெழுவினாரவர் தம்மொடுங் கேடில்வாழ்பதி பெறுவரே. ௧௧

திருசிற்றம்பலம்

ஓ2 3:38·9114,TX
ந49

# திருக்கோவல் வீரட்டானம் - ஆலய நிர்வாகம்

இந்த ஆலயம் இந்துமத பரிபாலன போர்டார் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. பல வருஷங்களாக வக்கீல் ஸ்ரீநிவாசராவ் அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்து சாலச் சிறப்புடன் தொண்டாற்றி, வடமருதூர் சொத்துக்களை வாங்கி வைத்தார். அப்பால் (1937—1947) வக்கீல் V. G. இராமசந்திர அய்யர் அவர்கள் தருமபரிபாலகராக இருந்த காலத்தில் அன்னார் முயற்சியால் மேற்கண்ட ஸ்ரீநிவாசராவ் குமாரர் ஸ்ரீ. வாசுதேவராவ் அரசூர் நிலங்களையும், ஸ்ரீ. பெருமாள் செட்டியார் மையூர் நிலங்களையும், அரியூர் ஸ்ரீ. நாராயணசாமி செட்டியார் கோளப்பாரை நிலங்களையும், கோயிலுக்குக் கட்டளை நிலங்களாக எழுதி வைத்தனர். தவிர, இந்த தேவஸ்தானத்திற்குத் தேவனூர், தேவியகரம், அறகண்டநல்லூர், திருக்கோயிலூர் (சில வீடுகள் உள்பட), விண்மார், மணம்பூண்டி முதலிய ஊர்களிலும் நிலங்கள் உண்டு. மொத்தம் சர்க்கார் கிஸ்த்து வருஷம் 1-க்கு சுமார் ரூபாய் 300. கவர்ன்மெண்டாரிடமிருந்து தஸ்திக் வருமானம் வருஷம் 1-க்கு ரூபாய் 890 ஆகும். உற்சவாதிகளுக்குச் சில நிரந்தர கட்டளைக்காரர்கள் தான் இருக்கிறார்கள். அன்னார்கள் எல்லா உற்சவங்களுக்கும் பூரணமாக நிரந்தர ஏற்பாடுகள் செய்வது அவசியம்.

114000

என்கடன் பணிசெய்து கிடப்பதே